# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● மே 20, 2018 Weekly E-paper ● May 20, 2018


# பா.ஜ.க. போட்ட வேடமும் கர்நாடகம் தந்த பாடமும்!

● சுப.வீரபாண்டியன்



கர்நாடகத் தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கிய நேரத்திலிருந்து, காட்சிகள் மாறும் நாடகம் போலே பல மாற்றங்கள் நடந்துகொண்டே இருந்தன. வாக்குகள் எண்ணப்பட்ட போது, தொடக்கத்தில் விரைந்து மேலேறிய பாஜக, பிறகு மெல்லச் சரியத் தொடங்கியது. இறுதியில், அறுதி பெரும்பான்மைக்கு 112 இடங்கள் வேண்டும் என்ற நிலையில், 104 இடங்களை மட்டுமே பாஜக பெற்றிருந்தது. கங்கிரஸ் 78 இடங்களிலும், மதச் சார்பற்ற ஜனதா தளம் 38 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தன. ஆக மொத்தம், எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. மஜத கட்சியின் ஆதரவு யாருக்கு உள்ளதோ, அவர்களே ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

சட்டென்று காங்கிரஸ் கட்சி ஒரு முடிவெடுத்தது. மஜத ஆதரவைத் தான் கோராமல், அக்கட்சி ஆட்சி அமைக்கத் தான் ஆதரவு தருவதாகக் கூறியது. 38 இடங்களை மட்டுமே பெற்றிருந்த மஜத வின் தலைவர் குமாரசாமி முதலமைச்சராக ஒரு வாய்ப்பு வந்தது. இறுதிக் காட்சி இங்கு முடிந்திருக்க வேண்டும்.

ஆனால் பாஜக விற்கு இதனை ஏற்க மனமில்லை. எப்படியாவது தான் ஆட்சிக்கு வந்துவிட வேண்டும் என்று கருதிய அக்கட்சி, தன் ஆசைக்கு ஜனநாயகத்தைப் பலியிட முடிவு செய்தது. ஆளுநர் இருக்கப் பயமேன் என்று கருதி, ஒரு புதிய பின் வாசல் கதவைத் திறந்தது.

காங்கிரஸ் தன் ஆதரவை மஜத கட்சிக்கு வெளிப்படையாக அறிவித்த பின்னும், சட்டமன்றத்தில் தனிப் பெரும்பான்மை உள்ள கட்சி என்னும் அடிப்படையில் ஆளுநர், பாஜக வை ஆட்சி அமைக்க அழைத்தார். அதில் கூட ஒரு ஜனநாயக மரபு இருக்கிறது. ஆனால் அதற்குப் பின், பெரும்பான்மை இல்லை என்று வெளிப்படையாகத் தெரியும் நிலையில், பெரும்பான்மையை மெய்ப்பிக்க 15 நாள்கள் கால இடைவெளி வழங்கப்பட்டதே, அங்குதான் ஜனநாயகத்திற்கான புதைகுழி வெட்டப்பட்டது.




15 நாள்களில் 104 எப்படி 112 ஆகும்? 10 குதிரைகளையாவது காசு கொடுத்து வாங்கினால்தான் ஆகும் என்று ஆளுனருக்குத் தெரியாதா? அப்படி ஒரு குதிரை பேரம் நடப்பதற்கு மறைமுகமாக ஆளுநரே வழி செய்வதுதான் ஜனநாயகமா? 'ஊழலற்ற பாஜக' என்று பெருமை பீற்றிக்கொண்ட பாஜக வின் பொய் வேடம் இங்கு கலைந்து போயிற்று.

உச்சநீதி மன்றத்தின் தலையீட்டால் இன்று ஜனநாயகம் கர்நாடகத்தில் காப்பாற்றப்பட்டுள்ளது. கடைசி நிமிடம் வரையில் காத்திருந்து பார்த்துவிட்டு, இனி ஏதும் வாய்ப்பில்லை என்று ஆனபிறகு, எடியூரப்பா பதவி விலகி உள்ளார். எனினும் இத்துடன் பாஜக தங்கள் 'தகிடுதித்தங்களை' நிறுத்தி விடுவார்கள் என்று சொல்வதற்கில்லை. அடுத்த கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முயற்சியை அவர்கள் தொடரவே செய்வார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க முயல்வதும் அவமானம். விலை போவதும் அவமானம். ●

# மனிதநேயம் – அப்பல்லோ தேர்வாணையம் ஊழல்! ஊழல்!

● எழில்.இளங்கோவன்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்பது படித்த ஏழைப் பட்டதாரிகளுக்கு, உயர் பதவிகளுக்கு வழிவகுக்கும் ஓர் அரசு நிறுவனம்.

அ.தி.மு.க. ஆட்சியில் அரசு நிறுவனங்கள் என்றால் ஊழல்... ஊழல் என்ற பட்டியலில் இத்தேர்வாணையமும் இப்போது சேர்ந்துகொண்டது.

2016ஆம் ஆண்டில் குரூப்–1 தேர்வில் 74 பதவிகளுக்காகத் தேர்வு எழுதியவர்களில் 62 பேர்கள் இணைக் கண்காணிப்பாளர், வட்டாட்சியர் பதவிகளுக்குத் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

இந்த 62 பேர்களும் மனித நேயம் – அப்பல்லோ பயிற்சி மையத்தில் இருந்தே தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதில் மிகப் பெரும் ஊழல் நடைபெற்று உள்ளது.

ராம்குமார் என்பவர் தேர்வாணைய ஊழியர்களுடன் இணைந்து, தேர்வுக்கான வினாத்தாளைத் திருடிப் பயன்படுத்தி கொண்டு, மீண்டும் அங்கேயே வைத்துவிட்டார்.

இவர் கொடுத்த தகவலின்படி அதிகாரிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தனியார் பயிற்சிமைய இயக்குநர்கள் இதில் சம்பந்தப் பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

குறிப்பிட்டுச் சொன்னால் தேர்வாணைய



வினாத்தாள் மனிதநேயம் – அப்பல்லோ பயிற்சி மையத்திற்கும் கிடைத்திருக்கிறது.

எப்படி கிடைத்தது என்பது மிகப் பெரிய கேள்வி.

18–1–2018 அன்று இப்பயிற்சி மையத்தில் காவல்துறை நடத்திய சோதனையில் கைப்பற்றப் பட்ட முக்கிய ஆவணங்கள், கைபேசியில் இருந்த தொடர்பு எண்கள், தொடர்பு கொண்டவர்கள் யார் என்ற விபரம் இதுவரை வெளிவரவில்லை.

அப்பல்லோ பயிற்சி மையத்தின் இயக்குநர் சாம்ராஜேஸ்வர் தலைமறைவு ஆனார். அவர் கைது செய்யப்படவில்லை. அவருக்கு மிக எளிதாக முன்பிணை கிடைத்துள்ளது. மனிதநேய அறக்கட்டளைப் பயிற்சி மையத்தின் நிறுவனர் சைதை துரைசாமி அ.தி.மு.க.வின் முன்னாள் மேயர். அவரிடம் இன்னமும் விசாரணை கூட நடத்தவில்லை.

அப்பல்லோ பயிற்சி மையத்தில், பயிற்சி என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாய் புரண்டுள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

அரசு வேலை வாய்ப்புகளுக்காக இத்தேர்வாணையத்தை முழுமையாக நம்பிப் படிக்கும் ஏழைப் பட்டதாரிகள், கிராமப்புறங்களில் இருந்து வருபவர்களின் எதிர்காலம் இதன்மூலம் கேள்விக் குறியாகி இருக்கிறது.

இது குறித்துத் தேர்வாணையத் துணைச் செயலாளர், காவல்துறை ஆணையரிடம் புகார் கொடுத்திருக்கிறார்.

ஆனாலும் கைது செய்யப் பட வேண்டியவர்கள் கைது செய்யப் படவில்லை. ஆளும் கட்சியின் ஆதரவுடன் முன்பிணையில் வெளிவருகிறார்கள். விசாரிக்கப் பட வேண்டியவர்கள் விசாரிக்கப் படவில்லை.

இந்த ஊழல் குறித்து நேர்மையான விசாரணை நடத்த வேண்டும் என்றால் அதற்கு மத்தியப் புலனாய்வுத்துறை இதை விசாரிக்க வேண்டும்! அதுவும் உயர்நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ்! ●

# கோரிக்கைகளும், கோட்டை முற்றுகையும்...

● வெற்றிச்செல்வன்

தமிழகத்தில் 2003ஆம் ஆண்டு முதல் புதிய ஓய்வூதியத் திட்டம் எனப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, அரசு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம், தர ஊதியம், இவற்றுக்குரிய அகவிலைப்படி (டி.ஏ.) ஆகியவற்றில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இதே அளவு தொகையை அரசு தன் பங்கிற்குச் செலுத்துகிறது. இவ்வாறு சேரும் தொகையானது அரசு ஊழியர் ஓய்வுபெறும்போது 60 சதவீதம் வழங்கப்பட்டுவிடும். எஞ்சிய 40 சதவீதத் தொகை பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் தொகை ஓய்வூதியமாக வழங்கப்படும்.

புதிய பென்சன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கடந்த 14 ஆண்டுகளில் ஏறத்தாழ 4 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

பழைய பென்சன் திட்டப்படி, அரசு ஊழியர் ஒருவர் 30 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் அவர் முழு ஓய்வூதியம் பெறலாம். முழு ஓய்வூதியம் என்பது அவர் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அதற்கு உரிய அகவிலைப்படி ஆகியவற்றை உள்ளடக்கியது. 30 ஆண்டுகளுக்குக் குறைவாக இருந்தால் பணிக்காலத்துக்கு ஏற்ப ஓய்வூதியத் தொகை நிர்ணயிக்கப்படும். இதற்கெனத் தனிக் கணக்கீடு உள்ளது.

புதிய பென்சன் திட்டத்தில் எவ்வளவு ஓய்வூதியத்தொகை கிடைக்கும் என்று வரையறுக்க இயலாது. ஊழியரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டு




பங்குச்சந்தையில் செய்யப்படும் முதலீட்டின் பலனைப் பொறுத்தது. பணிக்கொடை (கிராஜுவிட்டி), சிபிஎப் தொகையில் கடன் மற்றும் முன்பணம் பெறும் வசதி, குடும்ப ஓய்வூதியம், அகவிலைப்படி உயர்வு இவை எதுவும் கிடையாது என்பதால்தான் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் புதிய பென்சன் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும், 21 மாத ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஜாக்டோ ஜியோ அமைப்பானது பல்வேறு போராட்டங்களை நடத்திய பிறகும் அரசு கோரிக்கைகளை நிறைவேற்றாமல் தொடர்ந்து அரசு ஊழியர்களைப் புறக்கணித்ததன் விளைவாக, கடந்த 08.05.2018 அன்று சென்னையில் கோட்டையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை அறிவித்தது.

ஜாக்டோ ஜியோ அமைப்பினரை எவ்விதப் பேச்சுவார்த்தைக்கும் அழைக்காத தமிழக அரசு நூற்றுக்கணக்கான ஜாக்டோஜியோ நிர்வாகிகளைக் கைது செய்து போராட்டத்தை ஒடுக்க முயன்றது. சென்னைக்கு வெளியேயுள்ள சுங்கச் சாவடிகளிலேயே வாகனங்களைத் தடுத்து நிறுத்தியும், திருப்பி அனுப்பியும் போராட்டத்தின் தீவிரத்தைக் குறைக்க முயன்றது. இத்தனை கெடுபிடிகளையும் தாண்டி ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் கோட்டை முற்றுகையில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட 1700 பெண்கள் உட்பட 7,600 பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். ஆசிரியர் ஒருவர் போராட்டத்தின் போது உயிரிழந்த அவலமும் நிகழ்ந்தது.

சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு 100% ஊதிய உயர்வு வழங்கிடும் அடிமை அரசுக்கு, அரசு ஊழியர்கள் என்றவுடன் நிதிப் பற்றாக்குறை கண்ணுக்குத் தெரிகிறது. அரசு ஊழியர்கள் போராட்டத்தை அறிவித்தவுடன் அவர்களை அழைத்துப் பேசாத செயலற்ற அரசு, மாறாக தமிழக அரசின் வருமானம் முழுவதும் அரசாங்க ஊழியர்களுக்கே செலவழிக்கப்படுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயல்கிறது. காவல்துறையை ஏவிப் போராடுவோரை அச்சுறுத்துகிறது. அரசு ஊழியர்களின் ஆண்டாண்டு காலக் கோரிக்கைகளைத் தூக்கியெறியும் சர்வாதிகார அரசு, தூக்கியெறியப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை. ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

# ‘காவி’யாக்கப்படுகிறதா சிவில் சர்வீஸ்?

சிவில் சர்வீஸ் என்று அழைக்கப்படும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.ஆர்.எஸ்., ஐ.எஃப்.எஸ். போன்ற 24 பணியிடங்களுக்கான தேர்வுகளில் பார்ப்பனர்களே முதல் இடத்தில் இருக்கிறார்கள்.

இரண்டாவதாகப் பிற்படுத்தப்பட்டவர்கள். மூன்றாவதாக மிகக் குறைந்த அளவில் சிறுபான்மையினர், கிராமப்புறம், தாழ்த்தப்பட்டவர்களில் இருந்து வருகிறார்கள். மலைவாழ் பழங்குடி மக்கள் இன்னும் குறைவு.

அப்படி இருந்தும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை, கிராமப் புற, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களிடமிருந்து சிவில் சர்விசை முற்றிலும் பிடுங்கிவிட இங்கேயும் கைவைக்கப் போகிறது பா.ஜ.க. ஆட்சி.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இத்தேர்வில் முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, அடுத்து நேர்முகத் தேர்வு என மூன்று கட்டமாகத் தேர்வு நடத்தபடுகிறது.

இதன்படி முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களை வைத்து பணியிடங்கள் ஒதுக்கப்படும்.

இப்போது மத்திய அரசு இத்தேர்வு முறையில், மேற்சொன்ன தேர்வு மதிப்பெண்களை வைத்து ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.பி.எஸ். பணிகளை முடிவு செய்கிறது.

இதுவரை எந்த மாநிலத்தில் தாம் வேலை செய்யவேண்டும் என்பதை, தேர்வில் வெற்றி பெற்றவர்கள் முடிவு செய்து கொள்ள வழி இருந்தது.

இப்பொழுது இந்த நடைமுறையை மாற்ற மத்திய அரசு திட்டமிடுகிறது.

அதாவது தேர்வில் வெற்றி பெற்றவர்கள் உத்தரகாண்ட் முசௌரிக்குச் செல்ல வேண்டும், மூன்று மாதப் பயிற்சிக்காக.

இந்தப் பயிற்சி காலங்களில் கொடுக்கப்படும் மதிப்பெண்களையும் கூடுதலாகச் சேர்த்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.ஆர்.எஸ்., ஐ.எஃப்.எஸ். போன்ற பணிகள் கொடுப்பது பற்றி முடிவு செய்யப்படும். எந்த மாநிலத்தில் அவர்கள் பணியாற்ற வேண்டும் என்பதும் இதில் அடங்கும்.

முசௌரி பயிற்சியின் போது அங்குள்ள 10 போராசிரியர்கள் நினைத்தால், முதல் இடத்தில் உள்ளவரை 500ஆம் இடத்திற்கும், 500ஆம் இடத்தில் உள்ளவரை முதல் இடத்திற்கும் கொண்டு வர முடியும், அவர்கள் தரும் மதிப்பெண் மூலம்.

இதன்மூலம் பயிற்சி தரும் பேராசிரியர்கள் தயவிலேயே இருக்க வேண்டிய அவல நிலைக்கு தேர்வானவர்கள் ஆளாகின்றார்கள்.

विजय कुमार सिंह
Vijoy Kumar Singh
संयुक्त सचिव (प्र.)
Joint Secretary (Admn.)
टेली/ Tel. : 2309 3668
फैक्स/Fax : 2309 4001

सत्यमेव जयते

भारत सरकार
कार्मिक और प्रशिक्षण विभाग
कार्मिक, लोक शिकायत तथा पेंशन मंत्रालय
नॉर्थ ब्लाक, नई दिल्ली - 110001
GOVERNMENT OF INDIA
DEPARTMENT OF PERSONNEL & TRAINING
MINISTRY OF PERSONNEL, PUBLIC GRIEVANCES AND PENSIONS
NORTH BLOCK NEW DELHI-110001

DO. No.28020/1/2018-AIS(I)

Dated, the 17th May, 2018

Dear Singh,

As you are aware that the service allocation/cadre allocation to the candidates selected on the basis of Civil Services Examination is made well before the commencement of the Foundation Course every year.

2. The Prime Minister's Office (PMO) has desired to consider the following suggestion and necessary action on it for its implementation from the current year itself :-

**".....to examine if service allocation/cadre allocation to probationers selected on the basis of the Civil Services Examination be made after Foundation Course. Examine the feasibility of giving due weightage to the performance in the Foundation Course and making service allocation as well as cadre allocation to All India Service Officers, based on the combined score obtained in the Civil Services Examination and the Foundation Course."**

3. I shall be grateful if you could kindly examine rules of service under your control and provide the comments/inputs in the matter expeditiously within a week so as to enable this Department to take further necessary action in this matter.

Regards,

Yours sincerely,

(Vijoy Kumar Singh)

Mr. Abhay Kumar Singh,
DDG(Estt. & Training)
D/o Telecommunication,
Ministry of Communications and Information Technology
Room No. 1107
Sanchar Bhavan, 20, Ashoka Road, New Delhi
Mail: abhaykr.singh69@gov.in

सूचना का अधिकार

http://persmin.gov.in

இங்கே அதிகாரம், அரசியல், மதம், சாதி. பாலினம் இவையெல்லாம் நுழைந்து விடும்.

மேற்சொன்ன 10 பேராசிரியர்களில் ஆசிரியர்களில் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் இருக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியாது.

அப்படியானால் நிலைமை என்ன ஆகும்?

பார்ப்பனர்கள் உள்ளிட்ட உயர்சாதி வகுப்பினர் மட்டுமே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். பதவிகளையும், இதர பதவிகளை பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பெறும் நிலையும் ஏற்படும்.

மீண்டும் வருணாசிரமம் தலைதூக்கப் போகிறது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆட்சியினால்.

இதை ஆரம்பத்திலேயே முறியடித்தால் அன்றி, வேறு வழியில்லை.

## சுபவீ லண்டனில்...




லண்டனில் இயங்கிவரும் பெரியார் அம்பேத்கார் படிப்பு வட்டம் அமைப்பின் பொறுப்பாளர்களுடன் தோழர் சுபவீ

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keetru.com
www.peravai.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
122/130 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை – 600 024

தொலைபேசி: 044-4204 7162



## இந்திய அமைப்பில்

# இன்னும் ஓர் ஆணையம்!

மா.உதயகுமார்

வந்துவிட்டது தீர்ப்பு. காவிரியில் தண்ணீர் வாங்குவதைவிடச் சவாலாக அமைந்தது உச்சநீதிமன்றத்திலிருந்து ஒரு தீர்ப்பை வாங்குவது. கொடுக்க வேண்டிய அளவைக் குறைப்பது பின்னர் அதையும் கொடுக்காமல் தமிழர்களை அலைக்கழிப்பது. எந்த ஒரு நாட்டிலும் மக்கள் இந்த அளவிற்குத் துரோகங்களைச் சந்தித்திருக்கமாட்டார்கள்.

1901ஆம் ஆண்டில் தமிழ்நாடு 16 இலட்சம் ஏக்கர்களும், அன்றைய மைசூர் சமஸ்தானம் 3 இலட்சம் ஏக்கர்களும் நீர்ப்பாசனப் பரப்பைக் கொண்டிருந்தன. தற்போது 2010ஆம் ஆண்டில் தமிழ்நாடு 24 இலட்சம் ஏக்கர்களும், கர்நாடகம் 21.71 இலட்சம் ஏக்கர்களும் நீர்ப்பாசனப் பரப்பை கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டின் நீர்ப்பாசனப் பரப்பு இடையில் 1971 இல் 28 இலட்சம் ஏக்கர்களாக இருந்தது இப்போது 4 இலட்சம் ஏக்கர்கள் குறைந்துவிட்டது. ஆனால் கர்நாடகத்தின் நீர்ப்பாசனப் பரப்பு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதுதான் கர்நாடகம், இந்தியா என்னும் அமைப்பால் அடைந்திருக்கும் வளர்ச்சி.

2007இல் காவிரி நடுவர் நீதிமன்றம் தமிழகத்திற்கு 192 டிஎம்சி நீர் வழங்க உத்தரவிட்டிருந்தது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை எதிர்த்து 4 மாநிலங்கள் மேல்முறையீடு செய்திருந்தன. 192 டி.எம்.சி. நீர் ஒதுக்கியது போதாது எனத் தமிழகம் மேல்முறையீடு செய்திருந்தது. தமிழகத்திற்கான காவிரி நீரை 132 டி.எம்.சி. யாகக் குறைக்க கர்நாடகம் மேல்முறையீடு செய்திருந்தது.

தமிழகத்திற்கு வரும் காவிரி நீர் 192 டி.எம்.சியிலிருந்து 177.25 டிஎம்சியாகக் குறைக்கப்பட்டுள்ளது. கர்நாடகத்துக்கு 284.75 டிஎம்சி நீரும், கேரளாவுக்கு 30 டி.எம்.சி. நீரும், புதுச்சேரிக்கு 7 டிஎம்சி நீரும் வழங்க வேண்டும். இந்தத் தீர்ப்பை செயல்படுத்த ஸ்கீம் எனச் சொல்லப்படும் வரைவு செயல் திட்டத்தை வகுக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்து இருந்தது. இத்தீர்ப்பு தமிழர்களுக்கு இடியாய் அமைந்தது. ஆனால் இத்தீர்ப்பையும் கர்நாடகமும் செயல்படுத்தவில்லை, மத்திய அரசும் செயல்படுத்தவில்லை.

எத்தனை நாடகங்களை இந்த மூன்று மாதங்களில் நடத்தினார்கள். உச்சநீதிமன்றத்திற்கு மத்திய அரசின் மீதும், கர்நாடகத்தின் மீதும் எவ்வளவு கரிசனம். தமிழக மக்கள் எத்தனை போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால் கர்நாடகத்தில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் என்று பசப்பினார்கள்.

உலக வரலாற்றில் முதன் முறையாக "Scheme" என்றால் என்ன என்று ஒரு அரசாங்கம் உச்ச நீதிமன்றம் சென்ற பெருமையும் இந்தியாவையே சாரும். இந்த அரசாங்கம்தான் தகுதித்தேர்வுகளை நடத்துகிறது. வீட்டுப் பாடம் எழுதாமல் பலகாரணங்களைச் சொல்லும் பள்ளி மாணவன் தோற்றுப்போகும் அளவிற்கு உச்சநீதிமன்றத்தில் ஓர் அரசு காரணங்களைச் சொன்னது. இப்படி இரு முறை அவகாசம் கேட்டநிலையில் மத்திய நீர்வளத்துறை செயலாளர் யு.பி.சிங் கடந்த 14ம் தேதி 14 பக்க வரைவுச் செயல் திட்டத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த அறிக்கையைப் படித்து 4 மாநிலங்களும் அதில் பல்வேறு திருத்தங்கள் செய்யக் கோரி இருந்தன.




குறிப்பாக காவிரி மேலாண்மை ஆணையத்தின் முடிவுகளை மாநில அரசுகள் அமல்படுத்தவில்லை என்றால் மத்திய அரசு இறுதி முடிவை எடுக்கலாம் என்ற அம்சத்தைத் திருத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தது. அதைத் திருத்தி நீர்வளத்துறை செயலாளர் தாக்கல் செய்தார்.

இறுதியாக மத்திய அரசு தாக்கல் செய்த திருத்தப்பட்ட வரைவு செயல் திட்ட அறிக்கையை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாகத் தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களும் இனி காவிரி மேலாண்மை ஆணையத்தையே அணுக வேண்டும், மத்திய அரசை அணுகத் தேவையில்லை எனத் தீர்ப்பளித்திருக்கிறது. பருவகாலம் தொடங்குவதற்கு முன்பாகவே காவிரி மேலாண்மை ஆணையத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றும் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் மத்திய அரசு சரியாகச் செயல்படுத்தும் என்று நாம் நம்புவோம். கர்நாடகமும் தீர்ப்பின் சொல் பிறழாது நடக்கும் என்றும் நம்புவோம். ஏனெனில், உச்சநீதிமன்றத்தின் உத்தரவைச் செயல்படுத்த தாமதம் செய்த மத்திய அரசுக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்திருந்த அவமதிப்பு வழக்கை மிக அமைதியாக முடித்து வைத்து, மத்திய அரசின் மீதும் உச்சநீதிமன்றத்தின் மீதும் எவ்வளவு பெரிய நம்பிக்கையை நமக்கு உச்சநீதிமன்றம் ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் தமிழ்நாட்டிற்கு நன்மையைத் தவிர வேறொன்றையும் கனவிலும் நினைக்காத மத்திய அரசையும் உச்சநீதிமன்றத்தையும் நாம் நன்கு நம்புவோம்! ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.